**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 41/2014**

Deposition of **<u>DW.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 12.02.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : சாரல் (எ) பார்வதி Husband Name : கிருஷ்ணன்

துவக்க நேரம்: 12.55 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. தாவா சொத்து தாண்டானூர் கிராமத்தில் உள்ளது சரிதான். நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் மத்தூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எனது ஊரிலிருந்து தாவா சொத்து உள்ள இடம் சுமார் 25 கி.மீ தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு வீடோ, நிலமோ இல்லை என்றால் சரியல்ல, நான் பிறந்தது தாண்டானூர்தான் எனக்கு அங்கு வீடு உள்ளது.

2. எனது நிரூபண வாக்குமூலத்தில் தாண்டானூர் கிராமத்தில் வீடு உள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் அய்யன்பெருமாளின் மனைவி மற்றும் மகள் என்றால் சரிதான். தாவா சொத்தை அய்யன்பெருமாள் உயிருடன் இருக்கும்போதே கடந்த 23.01.1985 அன்று 1-ம் வாதி அன்புகரசுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணம் பொய்யானது. மேற்படி ஆவணம் பொய்யானது என்பதற்காக நானோ, 1, 2 பிரதிவாதிகளோ தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். அந்த வழக்கு

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. அய்யன்பெருமாளின் உடன்பிறந்தவர்கள் என அங்கம்மாள், அம்மீச்சி என குறிப்பிட்டுள்ள நிலையில் அவர்கள் யாருடைய வாரிசுகள் என்றால் இருசு படையாட்சியின் வாரிசுகள். மேற்படி இருசபடையாட்சியின் இறப்பு சான்று, வாரிசு சான்று நீதிமன்றத்தில தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் கிராம நிர்வாக அலுவலர் மேற்படி சான்றிதழ்களை வழங்கவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை.

3. அங்கம்மாள், அம்மீச்சி ஆகியோர்கள் தற்பொழுது உயிருடன் இருக்கிறார்களா என்றால் இல்லை. மேற்படி இருவரும் உயிருடன் இருந்தபோது இருசபடையாட்சியிடம் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை, ஆனால் பாகம் கேட்டார்கள். இருசபடையாட்சி அவரது சொத்தை கடந்த 25.02.1980 அன்று பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரத்தின்மூலம் பாகப்பிரித்துக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் பெண் வாரிசுகளுக்கு தெரியாமல் அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டார்கள். மேற்படி அங்கம்மாள், அம்மீச்சி ஆகியோர்களுக்கு வாரிசுகள் உள்ளனரா என்றால் உள்ளனர். மேற்படி இருவரின் இறப்புச் சான்று, வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிராம நிர்வாக அலுவலர் எங்களிடம் கொடுக்கவில்லை. வாதிகள் தரப்பு கொடுக்கவேண்டாமென சொல்லிவிட்டார்கள்.

4. அங்கம்மாள், அம்மீச்சி அவர்களின் வாரிசுகள் தங்களுடைய பாகம் கேட்டு இதுவரை எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்யவில்லை, ஆனால் பஞ்சாயத்துமூலம் கேட்டார்கள். கடந்த 1985-ல் வாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றாலும் கடந்த 40 ஆண்டுகளாக மேற்படி அங்கம்மாள், அம்மீச்சியின் வாரிசுகள் பாகம் கேட்டோ, மேற்படி கிரையத்தை ரத்து செய்யவோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் கிரையம் செய்த விவரமே எங்களுக்கு தெரியாது, நிலத்தை குத்தகை பயிர்செய்வதாக கூறியிருந்தார்கள்.

5. 1-ம் வாதி கிரையம் பெற்று நாளிலிருந்து அவரும், அவருக்கு பின்னிட்டு அவரது வாரிசுகளுக்குதான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் வருவாய் ஆவணங்களை அனைத்தும் அவர்கள் பெயரில் உள்ளது என்றாலும் கிரைய ஆவணம், வருவாய் ஆவணங்கள் அனைத்தும் செல்லாதது ஆகும். இதுநாள்வரை அந்த கிரைய ஆவணம், வருவாய் ஆவணங்கள் செல்லாது என்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொண்டுள்ளேனா என்றால் கிரையம் பற்றி தெரிந்த உடன்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

6. தாவா சொத்தானது வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும் அவர்களுக்குதான் முழு உரிமை என்றாலும் சரியல்ல, புத்திசுவாதீனம் இல்லாதவரை அழைத்து சென்று மனைவி, மக்களை சேர்க்காமல் கிரையம் செய்துகொண்டார்கள். அவ்வாறு அய்யம்பெருமாள் மேற்படி கிரையத்தின்போது புத்திசுவாதீனம் இல்லாமல் இருந்ததற்கான ஆவணங்கள் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை.

7. தாவா சொத்தின் கிழபுறத்தில் உள்ள ஏக்.0.72 செண்ட் நிலம் யார் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் அங்கம்மாள், அவரது மகள் அழகம்மாள் அனுபவத்தில் இருந்து வருகிறது. மேற்படி இருவரும் அனுபவத்தில் இருந்து வருவதற்கான ஆவணங்களை ஒப்படைத்துள்ளேனா என்றால் அந்த நிலம் கரம்பாக இருந்தது, பயிர் செய்யப்படவில்லை. மேலும் VAO ஆவணங்களை கொடுக்க மறுத்துவிட்டார். நான் சொல்வது தவறு என்றாலும் மேற்படி அங்கம்மாள், அழகம்மாள் இருவரும் தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்பதால்தான் என்னால் எந்த ஆவணமும் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த தேதியிலிருந்து அவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் கடந்த 1941-ம் ஆண்டிலிருந்து அனுபவத்தியிலிருந்து வருகிறார்கள்.

8. அய்யம்பெருமாளின் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் அவரைம் சேர்த்து 3 ஆண் சகோதரர்கள், 2 சகோதரிகள் மொத்தம் 5 நபர்கள். கடந்த 1980-ம் ஆண்டு எழுதப்பட்ட பாகபத்திரம் செல்லாது என எந்த நடவடிக்கையாது மேற்கொண்டுள்ளேனா என்றால் அவர்கள் எழுதிக்கொண்ட எந்த பத்திரமும் செல்லாது. அய்யன்பெருமாளின் உடன்பிறந்த சகோதரர்கள் பாகப்பிரிவினைப்படி அவரவரது பாகத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி அய்யம்பெருமாள் மட்டும் தனது பாகத்தை விற்றுவிட்டார் என்றால் அவரை அழைத்துகொண்டு போய் கையெழுத்து வாங்கிகொண்டார்கள்.

9. 1 பிரதிவாதி எங்கு குடியிருந்து வருகிறார்கள் என்றால் தாண்டானூர் குடியிருந்து அவ்வப்போது அவரது மகள் வீட்டிற்கு சென்று வருவார். 2-ம் பிரதிவாதி சேலத்தில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் அவரை அங்குதான் திருமணம் செய்து கொடுத்தார்கள். நான் சொல்வது தவறு என்றாலும் 1, 2 பிரதிவாதிகள் கடந்த 45 ஆண்டுகளாக சேலத்தில்தான் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல, தாண்டானூரில்தான் குடியிருந்து வருகிறார்கள். 1, 2 பிரதிவாதிகள் தாண்டானூரில் வசிக்கவில்லை என்றாலும் 1-ம் வாதி கிரையம் பெற்றதிலிருந்து தாவா சொத்தை எந்த இடையூறுமின்றி வாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றாலும் தற்பொழுது யாரோ சிலரின் தூண்டுதலால் வாதிகள் அனுபவத்திற்கு இடையூறு செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

10. வாதிகள் கிரையம் பெற்று 29 ஆண்டுகள் கழித்து பிரதிவாதிகள் வாதிகளின் அனுபவத்தை கடந்த 20.01.2014 அன்று இடையூறு செய்ததால்தான் 1-ம் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. 1-ம் வாதி அய்யம்பெருமாளை ஏமாற்றி கிரையம் பெற்றுக்கொண்டதற்காக காவல் நிலையத்தில் எதுவும் புகார் கொடுத்தாரா

என்றால் புகார் கொடுத்து அதன்பேரில் விசாரணை செய்தார்கள். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அப்பொழுது ஆவணங்களை வாங்கவில்லை. அதுப்பற்றிய விவரங்கள் அப்பொழுது தெரியவில்லை. அந்த விசாரணைக்கு நான் போகவில்லை.

11. நான் சொல்வது தவறு என்றாலும் 1980-ம் ஆண்டு பாகப்பிரிவினைப்படி தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை அய்யம்பெருமாள் 1-ம் வாதிக்கு கிரையம் கொடுத்தது செல்லும் என்றாலும் சரியல்ல, அந்த கிரையம் செல்லாது பாகப்பிரிவினை பத்திரத்தில் பெண் வாரிசுகளை சேர்க்கவில்லை. நான் சொல்வது போல் அங்கம்மாள், அம்மீச்சி இருவருக்கும் பாகம் இருந்திருந்தால் அவருடன் உயிருடன் இருந்தபோதே பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல, அவர்களுக்கு பாகம் உள்ளது.

12. எனக்கு எவ்வளவு ஆண்டுகள் நீதிமன்ற அனுபவம் உள்ளது என்றால் 40 ஆண்டுகளாக அனுபவம் உள்ளது. பிரதிவாதிகளே இந்த வழக்கை நடத்த முன்வராமல் உள்ளனர் என்றாலும் நான் வேண்டுமென்றே இந்த வழக்கை பிரதிநிதித்துவ அடிப்படையில் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு இடையூறு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பிரதிவாதிகளிடம் பொது அதிகாரம்பெற்று இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால சரியல்ல. எனது சாட்சியம் முற்றிலும் தவறானது என்றாலும் தாவாப்படி வாதிகளுக்கு தீர்ப்பாக வேண்டுமென்றாலும் சரியல்ல.

முடிவு நேரம்: 01.50 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.41/2014, Dt.12.02.2026.